**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 135/2020</u>**

நாள் 3.03.2026

DW1 – சுப்பராயன்

த/பெ – லேட். ஆறுமுத்தாக் கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of March 2026)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் எனது பெயரில் கடந்த 03.11.2005 தேதியில் கிரையம் பெறுவதற்கு முன்பாக 1ம் பிரதிவாதி குடும்பத்திடம் எப்போது பேசினேன் என்றால் கிரைய தேதியில் இருந்து ஒரு மாதம் முன்பாக சுப்பிரமணியத்திடம் போய் பேசினேன். அந்த சுப்பிரமணியத்தை தவிர அவரது சகோதரர், சகோதரி, தகப்பனார் ஆகியோரிடம் பேசவில்லையா என்றால் பேசவில்லை, சுப்பிரமணியத்தின் அப்பா ஏற்கனவே இறந்துபோய்விட்டார். அந்த சுப்பிரமணியத்தின் சகோதரர், சகோதரியின் குடும்பத்தினரிடம் பேசினேனா என்றால் நான் பேசவில்லை, சுப்பிரமணியத்தின் சகோதரர் ரங்கசாமியும் இறந்துபோய்விட்டார். நான் கிரையம் வாங்குவது சம்பந்தமாக 1ம் பிரதிவாதியிடம் மட்டும்தான் பேசினேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற தேதியான 03.11.2005 தேதியில்தான் 1முதல் 5 பிரதிவாதிகளும் பாகப்பிரிவினை செய்துகொண்டுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பாக சாசனத்தில் இந்த வழக்கின் வாதி பாப்பாத்தி கலந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். அந்த பாக சாசனமானது ஊத்துக்குளி சார்பதிவக ஆவண எண்.2076/2005 என்ற எண்ணாகவும், அதற்கு அடுத்த ஆவண

எண்.2077/2005 எண்ணாக எனது பெயரில் கிரையம் ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களையும் ஒரே ஆவண எழுத்தர் காந்திமதிநாதன் என்பவர்தான் தயார் செய்துள்ளார் என்றால் சரிதான். பாக சாசனத்தில் 2 வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ள நாச்சிமுத்து என்பவரை ஏற்கனவே எனக்கு தெரியும். அதாவது கிரையம் பெறுவதற்கு சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பாகவே எனக்கு தெரியும். அந்த நாச்சிமுத்து எனக்கு நண்பர். அதேபோல் மேற்படி பாகசாசனத்திலும், எனது பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணத்திலும் ஒரே சாட்சிகள்தான் கையொப்பம் செய்துள்ளனர் என்றால் சரிதான்.

2. தாவா சொத்திற்கு அருகில் உள்ள சொத்துக்களில் எனது பெயரில் தனியார் பள்ளி நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். அந்த பள்ளி அமைந்துள்ள பூமியானது எனது மகனான 7ம் பிரதிவாதி சந்திரகுமார் பெயரில் உள்ளது. 03.11.2005 தேதியிட்ட பாகசாசனத்தில் 1ம் பிரதிவாதி சுப்பிரமணியத்திற்கு அதிகமாக 2/3 பங்கு பாகம் ஒதுக்கப்பட்டதற்கான காரணமாக 1.3.2004 தேதியிட்ட உயில் சாசனத்தைதான் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனடிப்படையில்தான் ஏ– அட்டவணை சொத்தாக 1ம் பிரதிவாதிக்கு 2/3 பங்கு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிந்துதான் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அந்த உயில் பற்றிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, அந்த உயில் பற்றிய விவரம் எனக்கு ஏற்கனவே தெரியும். அந்த உயில் சாசனம் ஏற்பட்டதாக சொல்லப்படும் 1.3.2004 தேதியில் உயில் சாசனம் தயாரித்தபோதும், அதை பதிவு செய்தபோதும் நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை, அந்த உயில்

சாசனத்தை எழுதுவதற்கு முன்பாக அவர்களது வீட்டில் வைத்து உயில் சாசனம் எழுதுவது பற்றி என் முன்னிலையில்தான் பேசி முடிவு செய்யப்பட்டது. அப்போது வாதி பாப்பாத்தியும், அவரது கணவர் ரங்கசாமியும் உடன் இருந்தார்கள். அந்த உயிலில் ரங்கசாமி சாட்சி கையொப்பமும் செய்துள்ளார். மேற்படி விவரத்தை எனது எதிர் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. நான் பேசி முடிவு செய்துவிட்டு நான் என் வீட்டிற்கு வந்துவிட்டேன், அவர்கள் அன்றையதினமே சென்று உயில் சாசனம் தயார் செய்து பதிவு செய்தார்கள். ஆவண எழுத்தர் காந்திமதிநாதனை ஏற்கனவே எனக்கு 30 வருடங்களாக தெரியும். எனது பள்ளி அமைந்துள்ள பூமிகளை பகுதி, பகுதியாகதான் அவ்வப்போது கிரையம் பெற்றேன். அவ்வாறு சுமார் 10, 15 கிரைய ஆவணங்களாக கிரையம் பெற்றிருப்பேன் என்றால் இருக்கலாம். எனது பெயரில் உள்ள கிரைய ஆவணத்தில் என்னென்ன சர்வே எண்கள் போடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

4. உயில் சாசனத்தில் சொல்லப்படாத சொத்துக்களின் பேரில் 1ம் பிரதிவாதி சுப்பிரமணி கூடுதலாக உரிமை கோர முடியாது என்றால் அது எனக்கு தெரியாது. சர்வே எண். 86/8 முதல் 18 வரை உள்ள சொத்துக்களில் அவரது தகப்பனார் அவருக்குரிய 1/3 பங்கை 1ம் பிரதிவாதிக்கு உயில் சாசனத்தின் மூலம் கொடுத்துவிட்டதாக சொல்லிதான் 2/3 பங்கு சொத்தை ஏ– அட்டவணை சொத்தாக 1ம் பிரதிவாதி ஒதுக்கிக்கொண்டதாக பாக சாசனத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த உயில் சாசனத்தில் சர்வே எண். 86/8, 10, 12, 16 , 18 உட்பிரிவுகள் மட்டும்தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி உயில் சாசனத்தில் சொல்லப்பட்டுள்ள உட்பிரிவுகளை தவிர்த்து மற்ற உட்பிரிவுகளில் உள்ள கூடுதல் சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி எனக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்க முடியாது என்றால் சரியல்ல.

5. தாவா சொத்துக்களில் இந்த வழக்கு வாதி எனக்கு பாகம் வேண்டாம் என்றால் எழுத்துபூர்வமாக எந்த ஒரு ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான், வாய்மொழியாகத்தான் பாகம் வேண்டாம் என்று சொன்னார். அவ்வாறு எந்த தேதியில் பேசப்பட்டது என்றும், எந்த தேதியில் வாதி வாய் மொழியாக பாகம் வேண்டாம் என்று சொன்னார் என்றும் எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் வாதிக்கு பொதுவில் 1/4 பங்கு பாகபாத்திய உரிமை உள்ளது என்றும், அதனால் பூர்வீக சொத்தை பொறுத்து அவரது தகப்பனார் உயில் சாசனம் எழுதிவைக்க முடியாது என்றாலும் சரியல்ல. நான் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்தான் வாதி பங்கு இருப்பதை தெரிந்திருந்தும், தவறாக பாக சாசனத்தை செய்ய வைத்து அதன்பேரில் நான் தவறாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்தையும் சேர்த்துதான் எனது பள்ளியின் விளையாட்டு மைதானம் உள்ளது என்றால் சரியல்ல, இந்த சொத்தை தவிர்த்துதான் மற்ற சொத்துக்களில்தான் விளையாட்டு மைதானம் உள்ளது. தாவா சொத்தை இன்றைய தேதி வரையில் பொதுவில்தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்தை வாதியும், 4, 5 குடும்பத்தாரும் சேர்ந்துதான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை, 4, 5 பிரதிவாதிகள் மட்டும்தான் பொதுவில் அனுபவித்து வருகிறார்கள். வாதி அனுபவித்து வரவில்லை.

6. நான் சொத்தை கிரையம் பெற்ற பிறகு தாவா சொத்து சம்பந்தமாக எனது முன்னிலையில் வாதி மற்றும் பிரதிவாதிகளை வைத்து பைசல் பேசப்பட்டது என்றால் சரிதான், இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னிட்டும் ஒருமுறை வழக்கறிஞர்கள் முன்னிலையில் பைசல் பேசப்பட்டது. நான் சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பாக வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரை பெறவில்லை. வாதி வாய்மொழியாக அவருக்கு பங்கு வேண்டாம் என்று சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிக்கு பொதுவில் 1/4 பங்கு பாகபாத்திய உரிமை உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து வாதியிடமும், 4,5 பிரதிவாதிகளிடமும் அனுமதி பெறாமல் விளையாட்டு மைதானத்தை விரிவு படுத்தி காம்பவுண்ட் போட நான் முயற்சி செய்ததால்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கு பின்னிட்டுதான் சொத்து சம்பந்தமாக நகல் எடுத்து பார்த்த போதுதான் சொத்து சம்பந்தமாக பாக சாசனம், உயில், எனது பெயரில் கிரைய ஆவணம் ஏற்பட்டுள்ள விவரம் வாதிக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. வாதியின் அப்பா பழனிசாமி எந்த தேதியில் இறந்தார் என்றால் 2005 ம் ஆண்டுக்கு முன்பாகவே இறந்துபோய்விட்டார், அதுமட்டும்தான் தெரியும். நான் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காகத்தான் தாவா சொத்தை பொறுத்து பாக சாசனமும், அதே தேதியில் எனது பெயரில் கிரைய ஆவணமும் ஏற்படுத்திக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.03 14:20:04 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**